1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது பட்டு கிடைக்காத நிலையிலே கூட நாம் மத்திய அரசை அணுகி சீனாவிலிருந்து பட்டை இறக்குமதி செய்து விற்குமாறு கேட்க அவர்கள் ஓரளவு இறக்குமதி செய்திருக்கிறார்கள், இந்த நிலைமை ஓரளவு சீரடைந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது என்றாலும் எப்படிப்பட்ட நிலைமைகள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. அதற்குத் தக்க பரிகாரம் காண அரசு முயற்சி செய்யும்.

கல்லூரி முதல்வர்களின் சம்பள விகிதம்

* வினா எண் 782 திரு. ப. நெடுமாறன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பி. லிட். பட்டபடிப்பு கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் மற்ற கலைக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் அளிக்கப்படும் ஊதியங்களில் வேறுபாடு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் ஊதிய வேறுபாட்டினைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) வேறுபாடு உள்ளது.

(ஆ) இதுபற்றிய ஒரு நபர் குழுவின் பரிந்துரையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ப. நெடுமாறன் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. ஒரு நபர் பரிந்துரை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பரிந்துரை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் நிதித்துறையிடம் கலந்து கொண்டு அந்தப் பரிந்துரை களைப் பற்றி பரிசீலித்து அவர்களுக்கு தக்க நிவாரணம் தர வேண்டுமென்ற எண்ணம் கல்வித்துறையிடம் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பி. லிட் கல்லூரிகள் பத்தே பத்து தானிருக்கின்றன. அவைகளில் வேலை பார்க்கக்கூடிய முதல்வர் களின் கல்வித் தகுதியும் மற்றக் கலைக் கல்லூரிகளில் வேலை பார்க்கும் முதல்வர்களின் கல்வித்தகுதியும் நேகமாக ஒரே மாதிரிதான் இருக்கின்றது. ஆனால், பி. லிட் கல்லூரிகளில் வேலை பார்க்கும் முதலவர்களுக்கு ரூ. 800 ல் ஆரம்பித்து ரூ.1,600 வரை அளிக்கப்படுகிறது. ஆனால், மற்ற கலைக்கல்லூரிகளிலே இருக்கிற முதல்வர்களுக்கு ரூ. 1200 லே ஆரம்பித்து, ரூ. 1,900 வரை அளிக்கப்படுகிறது. இதில் ரூ. 300 தான் வித்தியாசம் இருக்கிறது. இந்த 10

கல்லூரிகளைச் சேர்த்தாலும் அரசாங்கத்திற்கு மாதத்திற்கு ரூ. 30,000 தான் அதிகமாகச் செலவாகும். ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. சம்பளத்தை தருகின்றபொழுது நாம் செலவை மட்டும் கணக்கிலே வைத்துக் கொண்டு இதைப் பரிசீலிக்க முடியாது. அவர்களுடைய தகுதி அவர்களுடைய, வேலை, அந்த நிலைமைகளையெல்லாம் வைத்துப் பரிசீலனை செய்துதான் நாம் சம்பள விகிதத்தை தர வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த நிலைமைகளைத் தான் இப்பொழுது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

கைதிகளின் குறைகளை வெளிப்படுத்த எல்லா சிறைகளிலும் புகார் பெட்டிகள் வைக்கும் திட்டம்

வினா எண் 783 திரு என். பழனிவேல் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

எல்லா சிறைச்சாலைகளிலும் புகார் பெட்டி (Complaint Box) வைத்து சிறைக்கைதிகளின் குறைகளை வெளிப்படுத்த வசதி செய்து தர அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி.பொன்னையன்: ஆம்

திரு. செ. இராமலிங்கம் பேரவைத் தலைவரவர்களே, எல்லாச் சிறைச்சாலைகளிலும் இப்படிப் புகார் பெட்டியிருந்தாலும் அந்தந்த சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கண்காணிப்பாளர்கள் தான் அந்தப் பெட்டியை திறக்கின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அதற்கான சாவியை ஒப்படைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியுள்ள ஆலோசனை நல்ல ஆலோசனையாக இருக்கிறது. இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புகார்ப் பெட்டியில் அவர்கள் பெயரையும் எழுதி அல்லது குற்றச்சாட்டுகளை எழுதிநடைபெறக் கூடிய தவிர்க்க முடியாத சில நிலைமைகளை எழுதிப் போட்டால் கூட அப்பொழுது அவர்களுக்குத் தண்டனை இல்லாவிட்டாலும் பின்னால் யார், என்ன எழுதியிருக்கிறார்கள் என்று அவர்கள்